**வனக்காப்பாளர் / ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர் பதவிகளுக்குச் சான்றிதழ் சரிபார்த்தல் / உடற்தகுதி சரிபார்த்தல் / உடற்திறன் தேர்வில் கலந்துகொள்வதற்கு விண்ணப்பதாரருக்கான அறிவுரைகள்**

(விளம்பர எண்.1/2018, நாள் 06.10.2018, அறிவிக்கை எண்.2)

**பொது**

1. விண்ணப்பதாரர்கள் கீழ்க்காணும் அறிவுரைகளை மிகவும் கவனத்துடன் படிக்கக் கேட்டுக்கொள்ளப் படுகிறார்.
2. விண்ணப்பதாரர்கள், இணையவழி விண்ணப்பத்தில் பதிவேற்றப்பட்ட கடவுச்சீட்டு அளவுள்ள (Passport size) இரண்டு புகைப்படங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

**A. சான்றிதழ் சரிபார்த்தல்**

விண்ணப்பதாரர்கள், **சான்றிதழ் சரிபார்ப்பிற்கு** குறிப்பாணையின் நகல் மற்றும் இணையவழி விண்ணப்பத்தின் நகல் ஆகியவற்றுடன் குறிப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் குறிப்பிட்டுள்ள நாள் மற்றும் நேரத்தில் தவறாமல் கலந்துகொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். சான்றிதழ் சரிபார்த்தலின்போது கீழ்குறிப்பிட்டுள்ள **அசல் சான்றிதழ்கள்** உடன், அவற்றின் சுய சான்றுடன் (Self Attested) கூடிய ஒரு தொகுதி (One Set) ஆகியவற்றை அவர்களது விண்ணப்பத்தில் தெரிவித்துள்ளவாறு கொண்டுவர வேண்டும். விண்ணப்பதாரர்கள் சான்றிதழ் சரிபார்த்தலுக்கு தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

விண்ணப்பதாரர்கள், சான்றிதழ்களைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள வரிசைக்கிரமப்படிச் சமர்ப்பிக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

1. பிறந்த தேதிக்கான சான்று (SSLC சான்றிதழ் / அரசிதழில் வெளியிடப்பட்ட அறிவிப்பு)
2. தகவல் சிற்றேட்டின் பத்தி 11(d) ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி தகுதிவாய்ந்த அலுவலரிடமிருந்து பெற்ற சாதிச் சான்றிதழ்.
3. விண்ணப்பத்தில் திருநங்கை (மூன்றாம் பாலினத்தவர்) என்று குறிப்பிட்டிருக்கும்பட்சத்தில் அதற்கான சுய உறுதிமொழி மற்றும் தகவல் சிற்றேட்டின் **இணைப்பு–II** ன்படி தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரியத்திடமிருந்து பெறப்பட்ட அடையாள அட்டை ஆகியவை.
4. அறிவிக்கை எண்.2, நாள்: 06.10.2018ன் இனம் 8ல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித்தகுதிக்கான சான்று.
5. விண்ணப்பதாரர், போதுமான தமிழறிவு கொண்டுள்ளதற்கான SSLC / HSC/ Degree சான்றிதழ் அல்லது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட இரண்டாம் வகுப்பு மொழித் தேர்வில் (முழுத்தேர்வு) தேர்ச்சி பெற்றதற்கான சான்றிதழ்.
6. விண்ணப்பதாரர் விண்ணப்பத்தில் தமிழ்வழியில் பயின்றோருக்கான (PSTM) இட ஒதுக்கீடு கோரியிருக்கும்பட்சத்தில் தகவல் சிற்றேட்டின் **இணைப்பு–IV** ன்படி தகுதிவாய்ந்த அலுவலரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ் (உரிய கல்வித்தகுதியை தமிழ்வழியில் பயின்று இருக்க வேண்டும்).

7. விண்ணப்பதாரர் விண்ணப்பத்தில் ஆதரவற்ற விதவைக்கான இட ஒதுக்கீடு கோரியிருக்கும்பட்சத்தில் வருவாய் கோட்டாட்சியர் / துணை ஆட்சியர் / உதவி ஆட்சியரிடமிருந்து பெறப்பட்ட ஆதரவற்ற விதவைச் சான்றிதழ்.
8. விண்ணப்பதாரர் விண்ணப்பத்தில் முன்னாள் இராணுவத்தினருக்கான இட ஒதுக்கீடு கோரியிருக்கும்பட்சத்தில் தகவல் சிற்றேட்டின் **இணைப்பு–V** ன்படி உள்ள சான்றிதழ்.
9. விண்ணப்பதாரர் ஒழுக்கம் மற்றும் நன்னடத்தைச் சான்றிதழைக் கடைசியாகப் படித்த அல்லது தற்பொழுது பயிலும் கல்வி நிறுவனத் தலைவரிடமிருந்து பெறப்பட்டிருக்க வேண்டும். விண்ணப்பதாரர் தொலைதூர வழியில் கல்வி பயின்றிருந்தாலும் இது பொருந்தும். தொலைதூர வழியில் பயின்ற விண்ணப்பதாரர்கள் கடைசியாக நேரடியாகப் பயின்ற கல்வி நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட ஒழுக்கம் மற்றும் நன்னடத்தைச் சான்றிதழ்.
10. விண்ணப்பதாரர் அரசுப் பணியாளராக இருக்கும்பட்சத்தில் தகவல் சிற்றேட்டின் **இணைப்பு–VI** ன்படி பெறப்பட்ட தடையின்மை சான்றிதழ்.
11. **ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர்** பணியிடத்திற்கு மேற்கூறியவற்றுடன் கீழே கொடுக்கப்பட்டுள்ள சான்றிதழ்களையும் சான்றிதழ் சரிபார்ப்பின்பொழுது சமர்ப்பிக்க வேண்டும்.

    i) தகுதிவாய்ந்த போக்குவரத்து அலுவலரிடமிருந்து பெறப்பட்ட ஓட்டுநர் உரிமம்

    ii) ஓட்டுநர் உரிமம் பெற்ற பிறகு வாகனம் ஓட்டியதற்கான முன் அனுபவமாக மூன்று வருட காலத்திற்கு குறையாமல் புகழ்பெற்ற நிறுவனத்தில் இலகுரக மோட்டார் வாகனம் / கனரக மோட்டார் வாகனம் ஓட்டியதற்கான சான்றிதழ்.

    iii) மோட்டார் வாகனங்களின் இயந்திர நுட்பம் குறித்த அடிப்படை அறிவு கொண்டதற்கான சுய உறுதிமொழி.

    iv) தமிழகத்தில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட முதலுதவி சான்றிதழ்.

    v) மாவட்ட தலைமை மருத்துவமனையில் கீழே கொடுக்கப்பட்டவையுடன் பெற்ற சான்றிதழ்

    a) கண்ணாடி அணியாமல் பார்வைத் திறன் கீழே கொடுக்கப்பட்டுள்ள அளவுகளில்:

| | **இடது கண்** | **வலது கண்** |
|---|---|---|
| துாரப்பார்வை | 6/6 | 6/6 |
| கிட்டப்பார்வை | 0.5 | 0.5 (ஸ்நெல்லன்) |

    b) இரண்டு கண்களும் போதுமான பார்வைத் திறனைக் கொண்டிருப்பது.

    c) நிறக்குருடு இல்லாமை, மாறுகண் அல்லது கண்களின் ஆரோக்கியமற்ற நிலை அல்லது ஒரு கண் தெரியாமல் இருப்பது.

d) விண்ணப்பதாரரின் ஏதேனும் ஒரு கண்ணில் லேசிக் / லேசர் அறுவை சிகிச்சை / எக்ஸைமர் அறுவை சிகிச்சை செய்யாமல் இருப்பது.

12. விண்ணப்பதாரர்கள், சான்றிதழ் சரிபார்த்தலுக்கு தற்காலிகமாக அனுமதிக்கப்படுவதின் மூலம் **உடற்தகுதி சரிபார்த்தல் மற்றும் உடற்திறன் (நடைத்தேர்வு) தேர்விற்கு கலந்துகொள்வதற்கு / பதவிக்கு தேர்ந்தெடுப்பதற்கு எந்த உரிமையும் கோரக்கூடாது.**

13. **விண்ணப்பதாரரின் விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களே எந்நிலையிலும் இறுதியானதாகும். விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களில் தவறு ஏதேனும் கண்டறியும்பட்சத்தில் விண்ணப்பம் எந்நிலையிலும் நிராகரிக்கப்படும். கல்வித்தகுதி / வயது / சாதி / இதர இட ஒதுக்கீடுகள் குறித்து பின்னர் பெறப்படும் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

14. விண்ணப்பதாரரின் கவனம் தகவல் சிற்றேட்டில் பத்தி 13ல் ஈர்க்கப்படுவதுடன், விண்ணப்பதாரர் சான்றிதழ் சரிபார்ப்புக் கூடத்தில் ஏதேனும் ஒழுங்கீனச் செயல்களில் ஈடுபடும் பட்சத்தில் அது தீவிரமாகப் பார்க்கப்படும்.

குறிப்பு:– சான்றிதழ் சரிபார்க்கும் மையத்திலிருந்து விடுபடுவதற்கு முன்பு, விண்ணப்பதாரர்கள் சான்றிதழ் சரிபார்த்தலுக்காக வழங்கப்பட்ட அனைத்து அசல் சான்றிதழ்களும் சரிபார்க்கப்பட்ட பின்பு பெற்றுக்கொண்டதை உறுதி செய்துகொள்ள வேண்டும். அசல் சான்றிதழ் தொலைந்துபோனபிறகு தேர்வுக் குழுமம் எந்த பொறுப்பும் ஏற்காது.

## B. உடற்தகுதி சரிபார்த்தல் / உடற்திறன் தேர்வு

சான்றிதழ் சரிபார்த்தலுக்குப் பிறகு தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர் உடற்தகுதி சரிபார்த்தல்/ உடற்திறன் தேர்விற்கு தற்காலிகமாக அனுமதிக்கப்படுவார். விண்ணப்பதாரர்களுக்கு, மேற்கூறிய தேர்வில் கலந்து கொண்டதற்கான சான்றிதழ் வழங்கப்படும்.

1. விண்ணப்பதாரர், உடற்தகுதி சரிபார்த்தல் / உடற்திறன் தேர்விற்கு தற்காலிகமாக அனுமதிக்கப்படுவதின் மூலம் **பதவிக்கு தேர்ந்தெடுப்பதற்கு எந்த உரிமையும் கோர இயலாது.**
2. விண்ணப்பதாரரின் அடையாளம் கண்டுகொண்ட பிறகு அறிவிக்கை எண்.2 ன் பத்தி 10 (ii)ல் குறிப்பிட்டுள்ளபடி **உடற்தகுதி சரிபார்த்தல் மற்றும் உடற்திறன் தேர்வு** நடத்தப்படும்.
3. குறிப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் குறிப்பிட்டுள்ள நாள் மற்றும் நேரத்தில் தவறாமல் கலந்துகொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்.
4. விண்ணப்பதாரர் உடற்தகுதி சரிபார்த்தல் / உடற்திறன் தேர்வின்பொழுது அறிவிக்கை எண்.2 ன் பத்தி 10 (ii) ல் குறிப்பிட்டுள்ள சான்றிதழைச் (உடற்தகுதிச் சான்றிதழ்) சமர்ப்பிக்க வேண்டும்.
5. விண்ணப்பதாரர், உடற்தகுதி சரிபார்த்தல் / உடற்திறன் தேர்விற்கு கலந்துகொள்ள முன்கூட்டியே பயிற்சி மேற்கொள்ளுமாறும், **காலணி, கால்சட்டை** போன்றவைகளை எடுத்து வருமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார். உடற்தகுதி சரிபார்த்தல் / உடற்திறன் தேர்வினை குறிப்பிடப்பட்டுள்ள ஒரே நாளில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் எதிர்பாராத சூழ்நிலைகளில் அடுத்தநாளுக்கு தள்ளிவைக்க நேரிடலாம். அதனால் விண்ணப்பதாரர்கள் முன்கூட்டியே அதற்குத் தயாராக வருமாறு அறிவுறுத்தப்படுகிறார்.

6. விண்ணப்பதாரர் மருத்துவரீதியாக தகுதியற்றவரென கண்டறியப்பட்டால் உடற்திறன் தேர்விற்கு அனுமதிக்கப்படமாட்டார் மேலும் மறுவாய்ப்பும் வழங்கப்படமாட்டாது.
7. விண்ணப்பதாரரின் கவனம் தகவல் சிற்றேட்டில் பத்தி 13ல் ஈர்க்கப்படுவதுடன், விண்ணப்பதாரர் சான்றிதழ் சரிபார்ப்புக் கூடத்தில் ஏதேனும் ஒழுங்கீனச் செயல்களில் ஈடுபடும் பட்சத்தில் அது தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

விண்ணப்பதாரர் உடற்தகுதி சரிபார்த்தல் / உடற்திறன் தேர்விற்கு அனுமதிக்கப்படுவது சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் நிலுவையில் உள்ள இத்தேர்விற்கான வழக்குகளின் தீர்ப்புகளுக்கு உட்பட்டு முற்றிலும் தற்காலிகமானதாகும்.

**உறுப்பினர் செயலர்**
**தநாவசீபதேகு**